முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 20.04.2026 அ.வ.எண். 137/2019 பி.வா.சா.1.குமரேசன் த/பெ.செல்வகுமார்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1.நான் யார்யாருக்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் தாசில்தார், சார்ஆட்சியர் மாவட்ட ஆட்சியர் பொதுப்பணித்துறை ஆகியோர்களுக்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர்களுக்கு சாட்சியம் அளிப்பதற்காக அவர்கள் பரிந்துறை கடிதம் கொடுத்துள்ளார்களோ என்றால் கொடுத்துள்ளார்கள். அவ்வாறு கொடுத்த கடிதத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 3 முதல் 7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதிக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2.தாவா சொத்துக்கள் எத்தனை சொத்துக்களாக உள்ளன தாவா ஏ மற்றும் பி அட்டவணை சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பிரிக்கப்பட்டுள்ள சொத்தில் ஏ அட்டவணை சொத்தானது வாதிக்கு முழுவதும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். வாதி தாவா பி அட்டவணை சொத்தில் எவ்வித உரிமையும் கோர வில்லையென்றும் மேற்படி சொத்தில் உள்ள 35 தென்னை மரங்களிலிருந்து காய் பரிப்பதை இடையூறு செய்யக்கூடாதெனவும் சட்டவிரோதமாக வாதியை காலிசெய்யக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளார் வழக்கு விவரமே தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3.எங்களுடைய பதிலுரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எந்த ஆவணங்களின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எங்களது அலுவலகத்தில் உள்ள வருவாய்துறை ஆவணங்களின்படி குறிப்பிட்டுள்ளேன் குறிப்பாக எந்த ஆவணம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தில் என்ன உள்ளது என்று தெரிந்துகொள்ளாமலேயே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையிலும் எதிர்வழக்குரையிலும் தாவா பி அட்டவணை சொத்தை நேரில் சென்று பார்வையிட்டதாக குறிப்பிடவில்லை என்றால்

சரிதான். ஆனால் நான் நேரில் சென்று பார்வையிட்டேன். அவ்வாறு நான் சொல்வது பொய்யல்ல.

4.எங்களது தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சட்டத்திற்கு புறம்பாக வாதியின் அனுபவ உரிமையை தடுத்தாலும் வாதியை காலி செய்ய எத்தனித்தாலும் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமே போதுமானது எதிரிடை அனுபவ பாத்தியம் கேட்கவேண்டிய அவசியம் வாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையில் ஐந்தாவது பத்தியில் வாதிகளும் 1,2 பிரதிவாதிகளும் கூட்டாக எண்ணம் கொண்டு பொதுப்பணிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

5.வாதிகள் பி அட்டவணை சொத்தை அனுபவ உரிமை கோர முடியாது என அறிவிப்பு ஏதேனும் கொடுத்தோமா என்றால் எங்களால் பி அட்டவணை சொத்திற்கு நான்கு எல்லை குறிப்பிடாததால் சொத்தை அடையாளம் காண முடியவில்லை. தாவா பி அட்டவணை சொத்து விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றும் தெரிந்து கொண்டே பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் சரியல்ல. பி அட்டவணை சொத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதை வாதிகள் எந்த காலத்திலும் தடுத்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் பி அட்டவணை சொத்தில் இருக்கும் 35 தென்னை மரங்களில் இருக்கும் காய்களை பறிப்பதற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும் சட்டத்திற்கு புறம்பாக வாதிகளை வெளியேற்றக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளாகளோ தவிர தாவா பி அட்டவணை சொத்தை எந்த காலத்திலும் வாதிகள் உரிமை கோர வில்லை அதற்கு அவசியமும் இல்லை என்றால் சரியல்ல.

6.வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகள் 6,7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நீர்வழி பாதைகளை ஆக்கிரமிப்பு முயற்சி செய்தார்கள் என்று கூறி இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அவர்கள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்திருந்தால் ஆவணங்கள் தாக்கல் செய்திருப்போம் என்றும் அவ்வாறு எவ்வித ஆக்கிரமிப்பு முயற்சி செய்யாததால் தான் ஆவணங்கள்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கோரிக்கை அவர்களுக்கு கிடைகக்கத்தல்ல என்று எங்களது எதிருரையிலும் முதல் விசாரணை சாட்சியத்திலும் கூறி இருப்பது ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. எங்களது எதிருரையிலும் முதல் விசாரணை சாட்சியத்திலும் கூறி இருப்பது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல

**ஒப்பம்/–R.சுஜாதா**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.